1974 மார்ச் 9]

தலைவரவர்களே, அந்த உரிமையாளர் இறந்து விட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உயிரோடு இருக்கும் போது அவர்களிடமிருந்து ஏதாவது எழுதி வாங்கப்பட்டதா? அவர்களுடைய சொந்தக்காரர்கள் யார் என்று கண்டுபிடிக்கப் பட்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா? அவர்களிடமிருந்து ஏதாவது எழுதி வாங்கியிருந்தால் அந்த அறிக்கையைப்பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, எல்லாவற்றையும் வழக்குக்காகத் தயார் செய்து கொடுத்து இருக்கிறோம். அவர் இறந்த பிறகுதான் இது கண்டுபிடிக்கப் பட்டது. ஆகவே, அவர்களுடைய சொந்தக்காரர்கள்—சகோதரர், அவரது மைத்துனர்—ஆகியோர் அந்த வழக்கில் சம்பந்தப் படுத்தப்பட்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 10.00)

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த வழக்கில் உரிமையாளர் இறந்துவிட்டார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர் இறந்தது பற்றி ஏதாவது சோதனை நடை பெற்றுள்ளதா? தற்கொலையால் அவர் இறந்தாரா என்று அரசாங்கம் விசாரணை நடத்தியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அந்த இலாக்கா என்னிடம் இல்லை.

Foodgrains seized at Kancheepuram

*316 Q—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether it is a fact that a large quantity of foodgrains was seized in Kancheepuram in Chingleput district around December, 1972; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) உணவுப் பொருள்கள் குறித்த குற்றங்களைப் புலனாய்வு செய்வதற்கான காவல்துறைப் பிரிவைச் சேர்ந்த செங்கற்பட்டு, காவல்துறை இன்ஸ்பெக்டர், 22—12-1972 அன்று காஞ்சீபுரத்தில்

பல்வேறு வணிகர்களிடமிருந்து 1,146 மூட்டை நெல்லையும் 47 மூட்டை அரிசியையும் கைப்பற்றினர். அவை கணக்கில் காட்டப்படாததே, கைப்பற்றப்பட்டதற்குக் காரணமாகும். அவற்றை என்ன செய்வது என்பது குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவரால் இறுதியாக ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரையில், பொறுப்பாக வைத்திருப்பதற்காக, இம்மூட்டைகள் காஞ்சிபுரம், வட்ட உணவுப் பொருள் வழங்கல் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டன. சிவகாஞ்சி காவல் நிலையத்தில் 503/72 முதல் 506/72 வரையிலான குற்ற எண்களில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. மேற்குறிப்பிட்ட குற்றங்கள் குறித்து, வழக்குத் தொடருவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்பளிப்பு வழங்கியுள்ளார். செங்கற்பட்டு, மாவட்ட மாஜிஸ்டிரேட் நீதி மன்றத்தில் இந்த வழக்குகள் விசாரணையில் இருந்து வருகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: இப்படிப்பட்ட நெல் மூட்டைகளை என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டே இருந்தால், நாளாக நாளாக கைப்பற்றப்பட்ட உணவுப் பொருள் பாழாய்ப் போய் சீக்கிரம் கெட்டுவிடும். ஆகவே, அவற்றை விற்று அதன் விலையை யாரிடமிருந்து நெல்லைக் கைப்பற்றினர்களோ அதற்கு சரிக்கட்டக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுப்பது அவசியம். எப்பொழுது வழக்கு முடியுமோ என்று நெல்லை வைத்துக்கொண்டு இருந்தால், வழக்கு எப்பொழுது முடியும் என்று சொல்ல முடியாது. ஆகவே அந்த உணவுப் பொருள்களை உடனடியாக மக்களுக்கு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அரசு ஏதாவது உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இந்தப் பொறுப்பு அதிகமாக சர்க்காருக்கு இருக்கிறது. அதைப் பாழாக்கிவிடாமல் பாதுகாக்கின்ற அளவிலே அதை எந்த இடத்தில் வைக்கவேண்டுமோ அந்த இடத்தில் வைத்திருக்கிறோம். அதற்கான சோதனைகளெல்லாம் செய்து முறைப்படி காப்பாற்றி வருகிறோம். நிச்சயம் கெட்டு விடாது.

திரு. ஆ. பரந்தாமன்: செங்கற்பட்டு மாவட்ட வட்டார வளர்ச்சிக் கூட்டத்தில் இதைப்பற்றி பிரச்னை வந்திருக்கிறது. இந்த விஷயத்தில் அரசு முக்கியமாக கவனிக்கவேண்டியது—சிறு சிறு வியாபாரிகள் இருக்கிறார்கள், ரூ. 500. 1,000 வைத்துக்கொண்டு வியாபாரம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் காஞ்சீபுரத்திற்கு உள்ளே நெல் எடுத்துச் செல்கின்ற நேரத்தில்

1974 மார்ச் 9]

அவர்களை அதிகாரிகள் பிடித்துவிடுகிறார்கள். காஞ்சிபுரத்திற்கு வெளியே வந்தால் பிடித்துவிடலாம் என்கின்ற அளவுக்கு அதற்கான ஒரு திட்டத்தை வகுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: *எந்த முறையில் கட்டுப்படுத்தவேண்டுமோ அந்த முறையில் சட்டம் போட்டிருக்கிறோம். கடத்தலைத் தடுப்பதற்குப் போடப்பட்ட சட்டத்திற்கு உட்பட்டுத் தான் வழக்குகள் தொடரப்படுகின்றன. சட்டத்திற்கு உட்படாமல் எதுவும் செய்யப்படவில்லை. உள்ளே வருகிறதா, வெளியே கொண்டு போகிறார்களா, கணக்கு எழுதி வைத்திருக்கிறார்களா என்பதையெல்லாம் ஆய்வு செய்து தான், ஏதாவது தவறு நடந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டால் இப்படிப்பட்ட வழக்குகள் போடப்படுகின்றன.*

திரு. கே. என். குமாரசாமி: *வியாபாரிகளிடத்திலிருந்து கணக்கில் வராத நெல்லைப் பிடித்து இப்பொழுது கேஸ் போடப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரசாங்க ஏஜெண்ட் மூலம் வசூல் பண்ணுகிற நெல்லை கோடவுனில் ஸ்டாக் வைத்து, சீல் வைத்து, அந்த நெல் மூட்டைகள் காணமல் போய்விடுகின்றன. அது பிறகு ஒரு வருஷம் கழித்து கண்டுபிடிக்கப்படுகிறது. இந்த நிலைமையை எப்படி அரசாங்கம் சரிக்கட்டப்போகிறது என்பதை அறிவிக்க இயலுமா?*

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: *இந்த முறைகளெல்லாம் இப்பொழுது மாற்றி அமைக்கப்பட்டுவிட்டன என்று நான் முன்பே சொன்னேன். 100, 200 இடங்களில் இருக்கும் பொழுது ஏதோ ஒன்று, இரண்டு இடங்களில் தவறு ஏற்படுகிறது. அம்மாதிரி தவறு எங்கும் இப்பொழுது நடைபெறுவதில்லை. தவறு இப்பொழுது ஒன்று, இரண்டு இடத்தில் தான் நடக்கிறது. அதுவும் இனிமேல் நிச்சயம் இருக்காது.*

Price review of agricultural produces

* 347 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Government have undertaken any periodical price review of agricultural produces in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: *(அ) ஆம்.*